# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

**C.C. No:** 464/2022 Date: 26.08.2025

**Prosecution Witness**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | **PW : 1** |
| Name | : | ஸ்டாலின் |
| Father's Name | : | கணேசன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Age | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 26.08.2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது தருமபுரி டவுன் ராயப்பகாலனி அண்ணாநகர் முதல் தெருவில் வசித்து வருகிறேன். நான் தற்போது அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முதல்வராக பாணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் எதிரியான ராஜேஷ் என்பவரின் சகோதரர் சான் சப்தகிரி Pee Gee Collage of Arts and Science Hotel Management Department –ல் நான் HOD யாக பணிபுரிந்தபோது எனக்கு எதிரியின் சகோதரர் என்னிடம் படித்து வந்தவகையில் எனக்கு எதிரியை தெரியும். எதிரி சோனா பில்டர்ஸ் மற்றும் டெவலப்பர்ஸ் பிரைவேட் லிமிடட் என்ற பெயரில் கட்டுமான நிறுவனம் நடத்தி வந்தார். நான் குடியிருந்த வீட்டிற்கு அருகில் 2400 சதுர அடி நிலத்தில் பழைய வீடு இருந்தது. அதை இடித்து கட்ட எதிரியிடம் அனுகினேன். எதிரி வீடு கட்ட ஒப்புக்கொண்டு ஏற்கனவே இருந்த வீட்டை இடித்து வேலையை துவங்கினார். சதுரத்துக்கு ரூ. 1,40,000/– என பேசி நானும் ஒப்புக்கொண்டேன். அஸ்திவாரம் வேலைக்கு துவங்கும்போது அதில் தரமற்ற பொருட்கள் பயன்படுத்துவது எனக்கு தெரிய வந்தது. கட்டுமான பணியின்போது மரவேலைக்காக இளைத்த மரங்களும், கம்பி மற்றும்

கட்டுமான பொருட்கள் வாங்க அவ்வப்போது கேட்டதின்பேரில் ரூ. 11,50,000/— எதிரிக்கு கொடுத்தேன். பொருட்களை ஆடர் செய்திருப்பதாக கூறி வேலையில் சிறிது காலம் நிறுத்திவைத்திருந்தார். இதற்கிடையில் என்னை பெங்களூருக்கு அழைத்து சென்று Furniture யை மொத்தமாக வாங்கலாம் என்றும் அதில் என்னை முதலீடு செய்யலாம் என கூறினார். அவர் கூறியதின் பேரில் நான் ரூ.10,50,000/—யும் நான் கூறியதின் பேரில் தருமபுரியை சேர்ந்த மல்லிகா என்பவர் ரூ. 13,00,000/— முதலீடு செய்தார். எதிரி எனக்கு 03 லாரிகள் மூலம் Furniture item அனுப்பினார். அது பிட்டிங் செய்யப்படாமல் இருந்தது. எதிரி என்னிடம் மேற்படி பொருட்களை ரூ.30,00,000/— ற்கு மிகாமல் விற்பனை செய்யலாம் என்று கூறினார். அவர் கொடுத்த பொருட்களில் சிறிது அளவு பிட்டிங் செய்யப்பட்டு ரூ.3,00,000/— ற்கு நான் விற்பனை செய்தேன். மேற்கொண்டு அந்த பொருட்களை பிட்டிங் செய்தபோது அதற்கான பொருட்கள் எதுவும் சரியாக இல்லை. அந்த பொருட்கள் பயன்படுத்துவதற்கு அற்றதாக இருந்தது. குண்டல்பட்டியில் உள்ள எனக்கு சொந்தமான குடோனில் மேற்படி பொருட்களை நான் வைத்துள்ளேன். எதிரியிடம் இதுபற்றி கேட்க முயற்சி செய்யும்போது எதிரி போன் மூலம் தொடர்பு கொண்டால் அழைப்பை ஏற்பதில்லை. வீட்டிற்கு சென்று பார்த்தால் வீட்டில் அவர் இருப்பதில்லை. இது சம்மந்தமாக 2021—ம் வருடம் தருமபுரி டவுன் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன்.